பெறுவதற்கான வாய்ப்பு குறைந்து போகிறது. இதைக் கருத்தில் கொண்டு அந்தத் தடையை நீக்குவதற்கு இந்த அரசு உடனடியாக முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் அருள் கூர்ந்து உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை நகரில் பால் வழங்கல்

***வினா எண். 45— திரு. கு. ரமணி :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை நகரத்திலுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு நல்ல முறையில் பால் கிடைக்காத நெருக்கடி உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம். எனில் சென்னை நகரிலுள்ளது போல் அரசு பால் விநியோக நிறுவனம் ஒன்றை அமைக்க உத்தேசம் உண்டா?

(இ) கோவை நகர மக்கள் அனைவருக்கும் நிர்ணய விலையில் பால் சரிவர கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) கோவை மாநகர் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் கோவை நகரின் பல்வேறு பகுதிகளிலும் தரமான பால் விநியோகம் தற்போது செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தரமான பால் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பல பகுதிகளில் விநியோகம் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். கோவை நகரத்தில் இருக்கும்படியான பகுதிகளில்— இப்போது அண்மையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளைப் பற்றி நான் சொல்லவில்லை—பழைய பகுதிகளிலேயே—5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 4—ல் ஒரு

[1981 ஜனவரி 27]

பகுதி மக்களுக்குக் கூட இந்த பால் விநியோகம் சரியாகச் செய்யப்படவில்லை. அதனால் ஏராளமான மக்கள் கஷ்டப் படுகிறார்கள். பல நேரங்களில் தண்ணீர் கலந்த பால்தான் விநியோகிக்கப்படுகிறது. இந்த நிலையை உணர்ந்து அரசே அங்கே ஒரு பால் விநியோகம் செய்யும் நிறுவனத்தை அமைத்து, அதன் மூலம் விற்பனை செய்ய முயற்சி செய்யப் படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே கோவை மாவட்ட ஒன்றியத்தின் சார்பாக பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது அரசின் கொள்கையின்படி தனியாக அங்கே ஒரு பால் விநியோக நிறுவனம் ஏற்படுத்தி, விநியோகம் செய்ய அரசு தயாராக இல்லை. இது அரசின் கொள்கை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியம் பால் விநியோகம் செய்கிறது என்பது அல்ல அங்கேயுள்ள பிரச்சினை. கோவை நகரத்தில் இருக்கும்படியான மக்களுக்கு, மிகவும் மோசமான முறையில் பால் வினியோகம் செய்யப் படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத்தான் எடுகக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும், அந்த நகரத்தை மாநகரமாக மாற்றப்பட இருக்கின்ற இந்த நேரத்தில் இந்த நிலைமை நீடிப்பது சரியல்ல. அத்தகைய ஒரு பெருநகரத்திற்குச் சீரான முறையில் பால் வினியோகம் செய்யும் பொறுப்பு இந்த அரசுக்கு இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். எந்த நிலையில் பார்த்தாலும், திருப்திகரமான முறையில் பால் விநியோகத்தைச் செய் முடியாத அந்த ஒன்றியத்தை அரசே ஏற்று நிர்வகிப்பதால் என்ன சட்ட விரோதம் அல்லது கொள்கை மாற்றம் வந்து விடும் என்பது எனக்குப் புரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவுபடுத்துவதோடு, அந்த விநியோக முறையைச் சீரமைக்கவும் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை நகரத்து மக்களின் பெருகி வரும் தேவையை நிறைவு செய்ய அரசு பல திட்டங்களைத் தீட்டி இன்றைக்குச் செயலாற்றிட எண்ணி இருக்கிறது. அந்த வகையில் செயல்படுகின்ற நேரத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், நிறைவு செய்யப்படும்.

[1981 ஜனவரி 27

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, விவசாயிகள் போராட்டத்தின்போது பால் விநியோக நிலையங்களுக்கு வந்த பாலுக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டிக் கேட்க வேண்டும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, கோவை நகரில் இலட்சக்கணக்கான மக்களுக்கு பால் கிடைக்காத நெருக்கடி இருப்பதால் கோவை மாவட்டத்தில் அரசு பால் பண்ணை அமைக்க அரசிடம் உத்தேசம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முரசொலிக்கு அளித்துள்ள சந்தா தொகை.

*வினா எண் 46—திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு செய்தித்துறை அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டிலுள்ள இந்து கோயில்கள் எல்லாம் முரசொலி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தாவாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தப் பணத்தை மீண்டும் அந்த கோயில்களுக்குத் திரும்பப்பெற ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) பதினைந்து திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு தலா ரூபாய் ஆயிரம் வீதம் சந்தா அளித்துள்ளன. இத்தொகையினை திரும்பப்பெற சம்பந்தப்பட்ட கோயில்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே 15 திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு 1,000 ரூபாய் வீதம் ஆயுள் சந்தா செலுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டு, அதை மீண்டும் திரும்பப் பெற ஏற்பாடு செய்து வருவதாக கூறினார்கள். இந்த 1,000 ரூபாயை செலுத்த வேண்டுமென்று அன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் கூறியதா அல்லது அந்த கோயில் நிர்வாகம் தாமாக முன் வந்து கொடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன். அதோடு இன்னொன்று இந்த 1,000 ரூபாய்க்கு ஓரளவுக்கு பத்திரிகை